செ.வெ.எண். 696

நாள் 17.08.2010

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

# செய்தி வெளியீடு – 17.08.2010

விருதுநகர் மற்றும் சிவகங்கை சரக மருந்து ஆய்வாளர்கள் 04.07.2007 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், அய்யன் கரிசல்குளம் கிராமத்தில் உள்ள லஷ்மி கிளினிக் என்ற நிறுவனத்தை ஆய்வு செய்தபோது மருந்து மற்றும் அழகு சாதன சட்டத்தின் கீழ் உரிமம் இல்லாமல் மருந்துகளை விற்பனைக்காக வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து மருந்துகளை கைப்பற்றி முதன்மை நடுவர் நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒப்படைத்தனர். பிறகு புலனாய்வு முடித்து, வழக்கு தொடர அனுமதி பெற்று நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பெற்றது. அவ்வழக்கில் 13.08.2010 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அவ்வழக்கில் முதன்மை நடுவர் நீதிமன்றம் மேற்படி சட்டப் பிரிவு 18 (C)–இன் கீழ் ரூ.5,000/– அபராதம் மற்றும் ஒரு வருடம் சிறை தண்டனையும், பிரிவு 18A–ஐ மீறியதற்காக ரூ.25,000/–மும் அபராதமாக விதித்துள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.

வி.கெ. சுப்புராஜ் 17/8/2010
அரசு முதன்மைச் செயலாளர்